இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 04-05-2023

# கர்நாடக பா.ஜ.க., பிரதமர் கட்டுப்பாட்டில் இல்லையா?

கடந்த ஏப்ரல் 27 ஆம் தேதி கர்நாடக மாநிலத்துக்கு வந்த பிரதமர் மோடி அவர்கள், இலவசங்களுக்கு எதிராக சிம்மக்குரல் கொண்டு சீறி இருக்கிறார். இலவசங்கள்தான் மாநிலங்களைக் கடனில் மூழ்கடித்து விடுகிறதாம். சொல்கிறார் பிரதமர்.

“இந்தியாவை முன்னேற்ற வேண்டுமானால், இலவசக் கலாச்சாரத்துக்கு முடிவு கட்ட வேண்டும். சில இலவசங்களைக் கொடுத்து மக்களை முட்டாள்களாக்க சில அரசியல் கட்சிகள் கருதலாம். ஆனால் உங்கள் எதிர்காலம் மட்டுமல்லாது, எதிர்காலத் தலைமுறையையும் சிந்தித்துக் கடமையாற்றும்படி இளைஞர்களைக் கேட்டுக் கொள்கிறேன். கவர்ச்சிகரமான இலவசங்களை வழங்கும் அரசியலுக்காக பெரும்பாலான மாநில அரசுகள் தங்கள் நிதி ஆதாரத்தில் பெரும்பகுதியைச் செலவிடுகின்றன. இது எதிர்காலத் தலைமுறைக்கான வளங்களைக் காலி செய்துவிடும். நிகழ்காலத்தைப்போல எதிர்காலத்தைப் பற்றியும் அரசுகள் சிந்திக்க வேண்டும்” என்று பிரதமர் பேசி இருக்கிறார். இது ஏப்ரல் 27.

அடுத்த மூன்று நாட்களில் மே1 ஆம் நாள் கர்நாடக பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையை வெளியிடுகிறது. பிரதமரின் சிந்தனைப் படிதானே அந்த அறிக்கை அமைந்திருக்க வேண்டும். அதுதான் இல்லை. முற்றிலும் மாறாக இலவசங்களை அள்ளி இறைத்திருக்கிறது பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை.

* ஏழைக் குடும்பங்களுக்கு தினமும் அரை லிட்டர் பால்
* ஆண்டுக்கு 3 சமையல் கியாஸ் சிலிண்டர் இலவசம்
* 5 கிலோ சிறுதானியங்கள் இலவசம்
* அடல் ஆகாரகேந்திரா சார்பில் குறைந்த விலையில் உணவு.
* படித்த இளைஞர்களுக்கு ஊக்கத்தொகை
* மூத்த குடிமக்களுக்கு இலவச மருத்துவப் பரிசோதனை – என்று அறிவித்துள்ளது கர்நாடக பா.ஜ.க.

**இலவசங்களை மூன்று நாட்களுக்கு முன்னால் கண்டிக்கிறார் பிரதமர். அதை மீறி இலவசங்களாக அறிவிக்கிறது கர்நாடக பா.ஜ.க. அப்படியானால் கர்நாடக பா.ஜ.க., பிரதமர் மோடியின் கட்டுப்பாட்டில் இல்லையா?**

**இலவசங்களை விமர்சிப்பதன் மூலமாக பெரிய மகுடத்தை தனக்குத் தானே சூட்டிக் கொள்கிறார் பிரதமர். ஆனால் அது நடைமுறையில் கடைப்பிடிக்கப்படுகிறதா என்றால் இல்லை.**

கடந்த ஆண்டு குஜராத் மாநிலத்தில் சட்டமன்றத் தேர்தல் நடந்தது. அப்போது பா.ஜ.க. அளித்த வாக்குறுதி என்ன? ‘Agresar Gujarat Sankalp Patra 2022’ எனப்படும் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கையில் இருந்தது பெரும்பாலும் இலவச வாக்குறுதிகள்தான். இதோ அவர்களது இலவச வாக்குறுதிகள்...

* அனைத்து பெண் குழந்தைகளுக்கும் கே.ஜி. முதல் பி.ஜி. வரை இலவசக் கல்வி.
* ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த கல்லூரி மாணவிகளுக்கு இலவச ஸ்கூட்டர்.
* 9 முதல் 12 வகுப்பு வரை படிக்கும் பள்ளி மாணவிகளுக்கு இலவச சைக்கிள்.
* பெண்களுக்கு ஆண்டுதோறும் 2 சமையல் காஸ் சிலிண்டர்கள்
* பொது விநியோகத் திட்டத்தில் மாதத்துக்கு ஒரு கிலோ பருப்பு இலவசம்
* ஆண்டுக்கு 4 முறை ஒரு கிலோ சமையல் எண்ணெய் இலவசம்
* இலவச சானிட்டரி நாப்கின்கள்
* மகப்பேறுத் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து உணவுப் பொருள்கள்.
* மாநிலம் முழுவதும் 100 இடங்களில் அன்னதான உணவகங்கள்
* அன்னதான உணவகங்களில் 5 ரூபாய்க்கு சாப்பாடு
* உயர் வகுப்பு ஏழைகளுக்கு ஏராளமான சலுகைகள்
* உயர்வகுப்பு ஏழைகளுக்கு இலவச நோயறிதல் சோதனைகள்.

– இவைதான் குஜராத் பா.ஜ.க. கொடுத்த வாக்குறுதிகள் ஆகும். வாக்குறுதிகள் அல்ல, இலவசங்கள். இப்படி அறிவித்துத்தான் வென்றார்கள். அதையே கர்நாடகாவில் அமல்படுத்தத் துடிக்கிறார்கள். ஆனால் இலவசங்களுக்கு எதிராக உபதேசம் செய்கிறார் பிரதமர்.

**சமூக நலத் திட்டங்களுக்கும் – இலவசங்களுக்கும் வேறுபாடு இன்னமுமா தெரியவில்லை. ஒரு தனி மனிதனின் அன்றாட வாழ்க்கைக்கான தேவையை ஒரு அரசு வழங்கினால் அது சமூக நலத் திட்டம் ஆகும். இலவசம் எது, மக்கள் நலத்திட்டம் எது என்பது குறித்து உச்சநீதிமன்றமே விளக்கமளித்துள்ளது. இலவசங்களையும் வளர்ச்சித் திட்டங்களையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்றும் சொல்லி இருக்கிறது.**

**“தேர்தலுக்கு முன்பாக அரசியல் கட்சிகள் அளிக்கும் வாக்குறுதிகளைத் தடுக்க முடியாது. ஆனால் சரியான வாக்குறுதிகள் எது, பொதுப் பணத்தைச் செலவிடுவதற்கான சரியான வழி எது என்பதுதான் எங்களது கேள்வி” என்று தலைமை நீதிபதி கூறியிருந்தார்.**

**“விவசாயிகளுக்கு மின்சாரம், விதைகள், உரங்களுக்கு அளிக்கப்படும் மானியத்தை இலவசமாகக் கருதமுடியுமா? இலவச சுகாதாரச் சேவைகள், இலவச குடிநீர், நுகர்வோருக்கு இலவச மின்சாரம் ஆகியவற்றையும் இலவசமாகக் கருதமுடியுமா? இலவசப் பொருட்களையும் இலவசக் கல்விப் பயிற்சியையும் ஒப்பிடக்கூடாது. மக்களின் ஊதியம், வாய்ப்புகள் போன்றவற்றில் நிலவி வரும் ஏற்றத் தாழ்வுகளை ஈடுசெய்ய வேண்டும் என்று இந்திய அரசியல் சட்டமே சொல்கிறது” என்றும் நீதிபதிகள் கூறினார்கள். இவை எதையும் கருத்தில் கொள்ளாமல் பொத்தாம் பொதுவாகப் பேசி இருக்கிறார் பிரதமர்.**

**517 கார்ப்பரேட் நிறுவனங்களின் 5 லட்சம் கோடி ரூபாய் கடனை தள்ளுபடி செய்ததை இலவசம் இல்லை என மோடி சொல்வாரா?**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (3.5.2023) முகாம் அலுவலகத்தில், சென்னை கிறிஸ்துவ கல்லூரி பள்ளியில் முதலமைச்சர் அவர்களுடன் படித்த முன்னாள் மாணவர்கள் சந்திரசேகர், தேவதாஸ், சீனிவாச மூர்த்தி ஆகியோர் சந்தித்து, சென்னை கிறிஸ்துவ கல்லூரி பள்ளியின் 1970–ஆம் ஆண்டு மலரை வழங்கினார்கள்.

## பில்கிஸ் பானு வழக்கு:

# குற்றவாளிகள் பொய்க் காரணங்கள் கூறி விசாரணையை இழுத்தடிக்க முயற்சி!

## உச்சநீதிமன்ற நீதிபதி கே.எம்.ஜோசப் கண்டனம்!

புதுடெல்லி, மே 4 -

பில்கிஸ் பானு வழக்கில், தண்டனைக் காலம் முடிவதற்கு முன்பே விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள், சாக்கு போக்கு கூறி விசாரணையை இழுத்தடிக்க முயற்சி செய்வதாக உச்சநீதிமன்ற நீதிபதி கே.எம்.ஜோசப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு குஜராத்தில் மதக் கலவரம் நடைபெற்றபோது பில்கிஸ் பானு கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார்.

அப்போது பில்கிஸ் பானு ஐந்து மாத கர்ப்பிணியாக இருந்த நிலையில் அவரின் 3 வயது மகள் உள்பட குடும்ப உறுப்பினர்கள் 7 பேரை வன்முறைக் கும்பல் கொலை செய்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக 11 குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை விதித்து கடந்த 2008ஆம் ஆண்டு மும்பை சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர்கள் அனைவரையும் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் சுதந்திர தினத்தன்று குஜராத் அரசு விடுவித்தது.

கடந்த 1992ஆம் ஆண்டு குஜராத்தில் அமல்படுத்தப்பட்ட சிறைக் கைதிகள் தண்டனைக் குறைப்பு கொள்கை அடிப்படையில், அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாக மாநில அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அவர்களின் விடுதலைக்கு எதிராக பில்கிஸ் பானு, திரிணாமூல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சுபாஷினி அலி உள்ளிட்டோர் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனுக்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகள் கே.எம்.ஜோசஃப், பி.வி. நாகரத்னா ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது.

அப்போது விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் தரப்பில் ஆஜரான வழக்குரைஞர்கள், பில்கிஸ் பானு மனு தொடர்பாக பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் கோரினர். இதற்கு கடும் அதிருப்தி தெரிவித்த நீதிபதி கே.எம்.ஜோசப், “ஜூன் 16ஆம் தேதி நான் ஓய்வு பெறுகிறேன். மே 19ம் தேதி என்னுடைய கடைசி வேலை நாள். அதன் பிறகு கோடை விடுமுறை தொடங்குகிறது.

நீங்கள் என்ன முயல்கிறீர்கள் என்று எனக்கு தெளிவாகத் தெரிகிறது. பில்கிஸ் பானு வழக்கை இந்த அமர்வு விசாரிக்கக் கூடாது என நீங்கள் நினைக்கிறீர்கள். இது நியாயம் அல்ல. நீதிமன்றத்துக்கு நீங்கள் ஆற்ற வேண்டிய கடமையை மறந்துவிடாதீர்கள்” என கடுமையாகக் கூறினார்.

இதனைத் தொடர்ந்து வழக்கின் அடுத்த விசாரணையை மே 9ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர்.

# சந்திரசேகரபுரம் அ.தி.மு.க. ஊராட்சி மன்றத் தலைவர் கழகத்தில் இணைந்தார்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. முன்னிலையில்

ராசிபுரம், மே.4 -

ராசிபுரம் ஊராட்சி ஒன்றியம் சந்திரசேகரபுரம் ஊராட்சி மன்ற தலைவர், தி.மு.க. நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தார்.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் ஊராட்சி ஒன்றியம் சந்திரசேகரபுரம் ஊராட்சி மன்ற தலைவர் அ.தி.மு.க.வைச் சேர்ந்த பஞ்சாயத்து தலைவர் பழனிவேல், துணை தலைவர் முத்துசாமி மற்றும் வார்டு உறுப்பினர்கள் தேன்மொழி, குமாரி, செல்வி அலமேலு மற்றும் மாரிமுத்து, சாந்தப்பன் உள்ளிட்டோர் அக்கட்சியிலிருந்து விலகி நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

இந்நிகழ்ச்சியில் ராசிபுரம் தி.மு.க.ஒன்றிய செயலாளரும், ஒன்றிய குழு தலைவருமான கே.பி. ஜெகநாதன், துணை தலைவர் சந்திரா சிவக்குமார். ஒன்றிய பொருளாளர் முத்துச் செல்வன், களரம்பட்டி பழனிவேல், மூர்த்தி, வரதராஜன், கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணி, சரவணன் உள்ளிட்ட பலர் உடன் கலந்து கொண்டனர்.

## இராஜஸ்தான் முதலமைச்சர்

# அசோக் கெலாட் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, மே 4 –

இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் அசோக் கெலாட் அவர்களுக்கு, நேற்று பிறந்த நாள்!

அதனையொட்டி அவருக்கு வாழ்த்துத் தெரிவித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக் கெலாட் அவர்களுக்குப் பிறந்தநாள் நல்வாழ்த்துகள்.**

**தாங்கள் மேலும் பல ஆண்டுகள் நல்ல உடல்நலத்துடன் திகழ்ந்து, ராஜஸ்தான் மக்களுக்காகப் பணியாற்றிட விழைகிறேன்.**

இவ்வாறு அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஏற்பாட்டில், ஆலந்தூர் தொகுதி நங்கநல்லூரில் பட்டா மாற்றத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கும் தனித்தனி பட்டா வேண்டும் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்போருக்கும் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் பட்டாக்களை வழங்கினர். உடன் அரசு அதிகாரிகள், கழக முன்னணியினர் உள்ளனர்.

# சி.பி.எம். கட்சியைத் தவறாக வழிநடத்துவது யார்?

தொழிலாளர் சட்டத்தில் ஒரு திருத்தம் தமிழ்நாடு அரசால் கொண்டு வரப்பட்டது. அதில் தொழிற்சங்கத்தினர், அரசியல் இயக்கங்கள் சில விமர்சனங்களை வைத்தார்கள். சந்தேகங்களைக் கிளப்பினார்கள். உடனடியாக இரண்டே நாளில் அந்த திருத்தச் சட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திரும்பப் பெற்றுவிட்டார்கள்.

மக்களாட்சியின் மாண்பையும், ஜனநாயகத்தின் குரலையும் அந்த அளவுக்கு கண்ணைப் போலக் காத்து நின்றார் 'திராவிட மாடல்' முதலமைச்சர் அவர்கள்.

**மக்களாட்சியின் அறத்தை, அரசியல் அறத்தை இதைவிட மதிக்கும் தன்மை வேறு எதுவும் இருக்க முடியாது.**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பேருள்ளம் நடுநிலையாளர்களால் போற்றப்பட்டு வருகிறது. ஆனால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத வகையில் சி.பி.எம். கட்சியில் சிலபேர் இருக்கிறார்கள் என்பதை அக்கட்சியின் நாளேடான 'தீக்கதிர்' 3.5.2023 தேதியிட்ட இதழைப் பார்க்கும் போது அறிய வருகிறது.

அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான டி.கே.ரங்கராஜன், கோயம்பேட்டில் நடந்த மே தின விழாவில் பேசும்போது, தமிழ்நாடு அரசு குறித்த தவறான கற்பிதங்களை உருவாக்கி உள்ளார்.

“தமிழகத்தை தி.மு.க. அரசு ஆட்சி செய்கிறதா? அல்லது அதிகாரிகளும் முதலாளிகளும் சேர்ந்து ஆட்சி செய்கிறார்களா? அதிகாரிகள் அரசை தவறாக வழிநடத்துகிறார்கள். தி.மு.க. அரசு தொடர்ந்து இருக்க வேண்டுமானால், இந்தச் சட்டத்தைக் கொண்டு வரக் காரணமான அதிகாரிகளையும் பணியில் இருந்து விடுவிக்க வேண்டும்” என்று பேசி இருக்கிறார்.

**தி.மு.க. அரசை அதிகாரிகள் தவறாக வழிநடத்துகிறார்கள் என்ற தவறான தகவலை டி.கே.ஆருக்கு சொன்னது யார்? எதை வைத்து அவர் சொல்கிறார்? எந்த முதலாளி இந்த ஆட்சியை நடத்துகிறார்? டி.கே.ஆர். இதனைச் சொல்ல வேண்டும்.**

**பொத்தாம் பொதுவாக நாலாந்தரப் பேச்சாளர் போல கூட்டணியில் இருந்து கொண்டே பொதுவெளியில் கூக்குரலிடுவதுதான் கூட்டணி தர்மமா? அப்படி ஒரு அவதூறு குற்றச்சாட்டை கூட்டணிக் கட்சியான சி.பி.எம்., தனது அதிகாரப்பூர்வ நாளிதழில் தலைப்பு போட்டு வெளியிடலாமா?**

இரண்டே நாளில் முதலமைச்சர் அவர்கள் சட்டத்தை திரும்பப் பெற்றாரே? டி.கே.ஆர். சொல்லும் 'முதலாளி' அப்போது எங்கே போனார்? என்ன குற்றச்சாட்டு இது? எத்தகைய வன்மம் டி.கே.ஆர். மனதில் இருந்தால் இப்படிப் பேசுவார்? எத்தகைய கோபம் இருந்தால் அதனைத் தலைப்பாக்கி வெளியிடுவார்கள்?

**ப.திருமாவேலன்**

தமிழ்நாடு சி.பி.எம். கட்சியை தவறாக யாரோ வழிநடத்தி வருகிறார்கள் என்பதுதான் நம்முடைய சந்தேகம்.

சில நாட்களுக்கு முன்னால், அக்கட்சியைச் சேர்ந்த வே.மீனாட்சி சுந்தரம் எழுதிய நூல் ஒன்றை, அக்கட்சியின் சார்பில் இயங்கி வரும் 'பாரதி புத்தகாலயம்' வெளியிட்டுள்ளது. 'சர்வாதிகார இந்துத்துவா மாடலுக்கு திராவிட மாடல் மாற்றாகுமா?' என்பது தலைப்பு. பிரதமர் மோடி அவர்களையும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் கார்ட்டூன் போட்டுள்ளார்கள். 'திராவிட மாடல்' மாற்றாகாது என்று சொல்லும் இந்த நூல், 95 ஆண்டு காலம் தமிழ்ச் சமுதாயத்துக்காக உழைத்த தலைவர் கலைஞரைக் கொச்சைப் படுத்துகிறது.

'திராவிடம்' என்பது இன வாதமாம். நிறைகுறைகளைச் சொல்கிறோம் என்ற போர்வையில் திராவிட இயக்கத்தை குறிப்பாக தலைவர் கலைஞரை கொச்சைப்படுத்தும் நூலை வெளியிட்டு மகிழ்ந்துள்ளார்கள். இத்தகையவர்களால்தான் சி.பி.எம். வழி நடத்தப்படுகிறதோ? அதன் குரல்தான் டி.கே.ஆர். போன்றோரது குரலோ? இதுதான் சி.பி.எம்.குரலா? என்பதே நமது கேள்வி!

'தி.மு.க. அரசு தொடர்ந்து இருக்க வேண்டுமானால்....' என்று சொல்லும் தகுதியோ, யோக்கியதையோ டி.கே.ஆர். போன்றோருக்கு இல்லை!

